பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை

குவைத்



“மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது”

மத் 3:2

# செய்திமலர்

மார்ச்
2026

இதழ்:09
மலர்:28

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். நம்மையும் நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தர் இதுவரை நம்மோடு கூட இருந்து நடத்தி வந்திருக்கிறார். இதை நினைவு கூர்ந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த மாதம் நடைபெற்ற ஆராதனைகள் ஜெபக்கூடுகைகள் விசேஷித்த கூடுகைகளில் கலந்து கொள்ள கர்த்தர் பாராட்டின தயவுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பாரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம்.

லெந்து நாட்களை அனுசரிக்கும் நாட்களில் இந்த வருடத்தின் மூன்றாவது மாதத்தில் கர்த்தரோடு கூட பிரவேசிக்கச் செய்த தேவனை இன்னும் துதிப்பேன் என்ற உறுதியோடு கூட எல்லா ஆராதனைகளிலும் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தவும், அதிகமாய் தேவனை கிட்டிச் சேரவும், நல் மனதுடன் செயல்படவும், நம் தேவனின் நாமம் மகிமைப்படும்படி நாம் வாழவேண்டியதும் நம்முடைய கடமையாக இருக்கிறது என்பதையும் மனதில் கொண்டு தேவனை சார்ந்து வாழ நம்மை நாமே ஆயத்தப்படுத்தி செயல்படுத்துவோமாக.

லெந்து நாட்களில் நாம் நம்மைப்பற்றி ஆராய்ந்து பார்த்து அதற்கு ஏற்ற மனந்திரும்புதலுக்கு ஏதுவாக நம்மை மாற்றிக் கொள்ள இந்த லெந்து நாட்கள் கிறிஸ்தவர்களாகிய நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை நம்மைவிட்டு அகற்ற இந்த லெந்து நாட்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். யோவான் ஸ்நானகனின் கூக்குரலே "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது"(மத்.3:2) என்றும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் "தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்.1:15) என்று சொல்லியே ஊழியத்தை ஆரம்பித்தார் என்றும் வாசிக்கிறோம்.

தேவனுக்கு பிரியமானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையானது ஆரம்பம் விசுவாசத்தில் தொடங்கினாலும் தேவன் விரும்புகிற மனந்திரும்புதல் மிகவும் அவசியமாய் நமக்கு தேவைப்படுகிறது. இந்த மனந்திரும்புதலானது நம்மை நாமே தேவனிடம் கிட்டிச்சேர்க்கும் நல் முயற்சியாய் அமைகிறது. இந்த மனந்திரும்புதலுக்கு வேத வாசிப்பும் ஜெபமும் உறுதுணையாய் இருக்கிறது என்பதையும் நாம் லெந்து நாட்களில் மிகவும் நினைவில் கொண்டு அவைகளையும் அதிகமாய் கைக்கொள்ள வேண்டியது அவசியம்.

உபவாசம், பிறருக்கு உதவுதல், தான தர்மங்கள், இரக்கம் பாராட்டல், பகைமை ஒழித்தல், அன்பை பெருக்குதல், ஒப்புரவாகுதல், போன்ற நற்பண்புகளால் லெந்து காலங்களில் நம்மை நாமே புதுப்பித்துக் கொள்வோம் தேவ இராஜ்ஜியத்திற்கு பங்காளர்களாய் மாறுவோம். தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

## தேவ செய்தி

## லெந்து காலம் – மனந்திரும்பலும், புதுப்பித்தலும்.

அன்பான கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளே,

லெந்து காலம் என்பது வெறும் 40 நாட்கள் நோன்பு நோற்கும் காலமல்ல அது நம்முடைய உள்ளங்களை ஆராய்ந்து, தேவனுக்கு அருகில் செல்லும் பரிசுத்தமான ஆன்மீக பயணமாகும். இந்த காலம் நம்மை மனந்திரும்ப செய்து சிலுவையின் அர்த்தத்தை ஆழமாக உணரச் செய்கிறது.

நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள் அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார் (யோவேல் 2:13).

லெந்து காலம் நமக்கு மூன்று முக்கியமான அழைப்புகளை அளிக்கிறது;

### 1.மனந்திரும்புதல்

நம் வாழ்க்கையில் தேவனுக்குப் பிடிக்காதவற்றை விட்டுவிட்டு, சுத்தமான மனதுடன் அவரிடத்தில் திரும்புவதே உண்மையான நோன்பாகும். வெளிப்படையான சடங்குகளைக் காட்டிலும் உள்ளார்ந்த மாற்றமே தேவனுக்கு பிரியமானது.

### 2.ஜெபம்

இந்த நாட்களில் ஜெப வாழ்க்கையை ஆழப்படுத்துவோம். இயேசு கிறிஸ்து வனாந்திரத்தில் 40 நாட்கள் ஜெபித்து தன்னை ஆயத்தப்படுத்தினார். அது போல் நாமும் சோதனைகளை வெல்ல ஜெபத்தில் வலிமை பெறுவோம்

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் ( மத் 26:41 )

### 3.தியாகம் மற்றும் அன்பு

லெந்து காலம் தியாகத்தின் காலம். இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் தம்மை அர்ப்பணித்தார். நாமும் சிறிய தியாகங்களின் மூலம் பிறருக்காகச் சேவை செய்து, அன்பை வெளிப்படுத்துவோம்.

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிக்கிறோம் (1 யோவான் 3:16)

இந்த லெந்து காலத்தில் நம் மனங்களை ஆராய்ந்து, தேவனோடு உறவை புதுப்பித்து, பரிசுத்தமான வாழ்க்கைக்குத் தயாராகுவோம். சிலுவையின் பாதை துன்பத்தின் பாதையாக இருந்தாலும், அது உயிர்த்தெழுதலின் மகிமைக்குக் கொண்டு செல்லும் பாதையாகும்.

இந்த பரிசுத்தமான லெந்து காலம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஆன்மீக புத்துணர்ச்சி மற்றும் ஆசீர்வாதத்தை கொண்டு வர தேவன் அருள் புரிவாராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்
சகோ. சாம் ஆனந்த்

## ஜெயம் தரும் ஜெபம்

1. இயேசு சொன்னார் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று.!

2. ஜெபம் என்பது ஒரு ப(ா)லம் இந்த பாலம்தான் மனிதனை தேவனோடு இணைக்கிறது! அநேகர் தேவைகளுக்காகவே தேவனை தேடுகிறார்கள் இனவிருத்திக்காக கரைக்கு வரும் கடல் ஆமையை போல !

3. வாழ்க்கையில் ஜெய ஸ்தம்பம் நாட்ட வேண்டுமானால் ஜெபம் எனும் அஸ்திபாரம் ஆழமாய் போடப்படவேண்டும் , இதில் விரிசல் விழும் போது ஆவிக்குரிய மாளிகை ஆட்டம் கண்டு (க)விழும்!

4. ஜெபம் எனும் அஸ்திபாரத்தில் உருவாக்கப்பட்ட ஆசீர்வாதங்கள்தான் நிலைக்கும், மற்றவை மவுலிவாக்கத்தில் விழுந்த மாடி கட்டிடம் போல பொல பொல வென்று இடிந்து போகும் !.

5. ஜெபம் என்னும் எண்ணெய் ஊற்றப்படும்போது குடும்ப விளக்கில் ஆசீர்வாத வெளிச்சம் பிரகாசமாய் மிளிரும்!

இது ஓர் போராட்ட களம் இந்த போராட்ட களத்தில் போராடித்தான் தேவனையும் மனிதனையும் மேற்கொண்டான் யாக்கோபு.

வாலிபர் பகுதி

# பரிசுத்தம்

"நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்."(லேவியராகமம் 19 :2). நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. (1பேதுரு 1:16)

பரிசுத்தத்தை பற்றி நமக்கு தெரிய வேண்டுமென்றால் முதலாவது நாம் நம்முடைய இரட்சிப்பிற்கு செல்ல வேண்டும். நாம் எப்பொழுது இரட்சிப்பை பெற்றோம் "ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எபிரேயர் – 8:12) அப்படியென்றால் இரட்சிப்பை நாம் இலவசமாய் பெற்று கொண்டோம். அதோடு கூட பரிசுத்தத்தையும் நமக்கு அவர் கொடுத்தார். பாவியாய் இருக்கும் போது அவர் நம்மை தேடி வந்தார். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; (யோவான் 15:16) ஆனால் இரட்சிக்கப்பட்ட போது இருந்த அந்த பரிசுத்த வாழ்க்கை சிலநாட்கள், சில மாதங்கள், சில வருடத்தில் குறைய ஆரம்பித்துவிடுகிறது. அவர் நம்மை தேடி வந்ததின் மூலமாய் யாருமே கொடுக்க முடியாத மறுமையிலும் வாழும் வாழ்வை நமக்கு கொடுத்துவிட்டார். ஆனால் அந்த மறுமை என்றும் பரலோகத்திற்கு செல்வது செல்லாதிருப்பது நம்மிடம்தான் உள்ளது. பரிசுத்தமாய் வாழ்ந்தால் மறுமைக்குள் பிரவேசிப்போம் இல்லை என்றால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவோம். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத்தேயு–5:8."யாவரோடும் சமாதானமாய் இருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபிரேயர் – 12:14)

நாம் பரிசுத்தமாக்கப்பட்டோம் ஆனால் அதை சிலர் அதை இழந்துவிட்டோம். "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்கு பிரதானமாய் காணப்படுவது எது என்றால் "அன்பு", எப்படி என்றால் "உங்கள் அன்பு மாய மற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்." (ரோமர் 12:9) நம்முடைய அன்பு தீமையை வெறுக்கின்றதாய் இருக்க வேண்டும்: எது தீமை "எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யா திருப்பாயாக,

பொய்ச்சாட்சி சொல்லா திருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" ரோமர் 13:9. நியாயப்பிரமாணத்தையும் பத்து கட்டளைகளையும் கடைபிடிக்கிறவன் எவனும் "பரிசுத்தவான்" அப்படியென்றால் "ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்." (ரோமர் 13:8)

"அன்பானது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோமர்–13:10) பல வகை பாவங்களுக்கு ஒருவர் அடிமைப் பட்டிருக்கின்றார். அவர் இந்த பாவங்களை விட வேண்டுமென்றால் அந்த பல பாவங்களை எப்படி விடுவது என்று சிந்திக்காமல் அவர் தேவ அன்பை பெறும்போது இந்த பாவங்கள் தானாய் விலகுவதை அவர் காணமுடியும். அன்புதான் நம்மை பரிசுத்தத்திற்குள் இழுத்து செல்லுகிறது. ஆதலால் நம்மில் தேவ அன்பு இருந்தாலே நாம் "பரிசுத்தவான்கள்" தான். "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்." (1 கொரி 13:1). எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள் அன்பு திரளான பாவங்களை மூடும். பாவமாய் வாழ்வது "பரிசுத்த வாழ்வை" பரிசுத்த வாழ்விற்கு நம்மை நடத்தியது (அன்பு). "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1யோ–4:8).

அன்பில்லாதவன், பரிசுத்தமில்லாதவன் தேவனை அறியார்கள்.

பரிசுத்தமாய் வாழ்ந்த ஆசா:

"ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்." (1இராஜா–15:11).

என்ன செம்மையானதை செய்தான்?

"அவன் இலட்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றி, தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கி, தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய
மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான். மேடைகளோ தகர்க்கப்படவில்லை;

ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது."(1இராஜா–15:12,13,14)"ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச்

செய்தான்." (2நாளா-14:2) "தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து." (2நாளா-14:4) நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து பரிசுத்தவானாய் வாழ்ந்தான்.

## பரிசுத்தமாய் வாழ்ந்த யோவான்:

"பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்."(லூக்கா 1:17). தனக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி தெரிந்துக் கொள்ளப்பட்டவன்தான் யோவான். "அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்."மாற்கு 6:20.

## பரிசுத்தமாய் வாழ்ந்த பவுல்:

"பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்." (அப்போ 23:1) "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி."(1தெசலோனிக்கேயர் 2:10).

## பரிசுத்தர் இயேசு கிறிஸ்து:

"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை."(யோவான்-8:46). "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;" (பிலிப்பியர்-2:5)."என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்." (லேவி 22:32) "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." (வெளி 22:11).

கர்த்தர்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

# இடறுதல் இல்லாத வாழ்க்கை

ஸ்பர்ஜன் என்னும் புகழ் பெற்ற பிரசங்கியார் ஒருமுறை கிறிஸ்தவ வீடு ஒன்றிக்கு சென்றிருந்தார். குடும்பத்தினரோடு பல விஷயங்களை பேசிவிட்டு, தன் பையில் வேதாகமம் இருந்தும் அந்த வீட்டிலிருந்து வேதாகமத்தை கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். அவர்களோ வேதத்தை படிக்கும் பழக்கமே இல்லாத கிறிஸ்தவர்கள். குடும்ப ஜெபமும் இல்லாத கிறிஸ்தவர்கள். ஆகவே சுமார் 20 நிமிடம் கழித்து ஒரு மூலையிலிருந்து வேதத்தை தேடி எடுத்து, தூசி தட்டி பிரசங்கியார் கையில் கொடுத்து, பாருங்கள்! வேலைக்காரன் எங்கேயோ போட்டிருக்கிறான் என்று வேலைக்காரன் மேல் குற்றம் சாட்டினார்கள். ஸ்பர்ஜன் அந்த வேத புத்தகத்தை வாங்கிய பொழுது, அதில் நாலைந்து துவாரங்கள் இருப்பதை கவனித்தார். அநேக ஆண்டுகளாக அவ்வேதத்தை உபயோகிக்காததால் பூச்சிகள் துளைத்துள்ளன என்று அறிந்து கொண்டார். இறுதியில் அவர் ஜெபிக்கும் போது, ஆண்டவரே! வேதத்தை முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டை வரை துளைத்துக் கொண்டு போகவல்ல ஒரு பூச்சியாக, புழுவாக என்னை மாற்றும், எங்களை மாற்றும் என ஜெபித்தார். அக்குடும்பத்தார் தங்கள் தவறை உணர்ந்தனர். கிறிஸ்தவர்களாகிய நம்மில் அநேகர் வேதத்தை ஆராதனைக்கு மட்டுமே எடுத்துச் செல்கிறோம். ஒரு சிலர் சங்கீதத்தையும், நீதிமொழிகளையும் மாத்திரமே வாசிக்கிறோம். "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்: அவைகளை அந்நிய காரிமாகவே எண்ணினார்கள்"" (ஓசி. 8:12) என்று தேவன் நம்மைக் குறித்து சொல்லாதபடி,

வேதத்தை தினமும் வாசித்து அப்பியாசிக்கப் பழக வேண்டும். தேவன் நமக்கென்று எழுதிக் கொடுத்துள்ள மகத்துவமான காரியங்களை நாம் வாசித்து அவற்றை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றை யாருக்கோ தேவன் எழுதியிருக்கிறார் என்று அந்நிய காரியமாக எண்ணக் கூடாது. நாம் முழு வேதத்தையும் வாசித்து தியானிப்போமானால் இடறலற்ற சமாதான மான ஒரு வாழ்வை வாழ முடியும். காரணம் கிறிஸ்தவ வட்டாரத்தில் அநேக துர்உபதேசங்களும், வேதத்தில் சொல்லப்பட்டிராத பல புதிய முறைகளும் எங்கும் பரவி படர்ந்து வருகின்றன. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும் விதமாக அவைகள் எங்கும் வலுவாய் தொனிக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நாட்களிலே நாம் முழு வேதத்தையும் தியானித்து பெரோயா பட்டணத்தாரை போல காரியங்கள் அப்படி இருக்கிறதா! என வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து நற்குண சாலிகளாக நாம் மாறவேண்டியது மிகவும் அவசியம்.

பிரியமானவர்களே! ஒவ்வொரு நாளும் வேதம் நமக்கு ஆத்மீக ஆகாரமாக மாறுமென்றால், உலகிலுள்ள அனைத்து சோதனைகளிலும் நாம் ஜெயமெடுக்க முடியும். உலகமோ, மாமிசமோ, பிசாசோ எனக்கு எதிராய் நிற்பவன் யார்? என நாம் தைரிய மாய் சொல்ல முடியும். எப்படிப்பட்ட பிரச்சனைகளோ, வேதனைகளோ, தோல்விகளோ, துன்பங்களோ எது வந்தாலும் வேதம் நமக்கு வழிகாட்டியாக மாறும். ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து தேவ சமூகத்தில் காத்திருக்கும் போது, வேதத்தின் இரகசியங்களை தேவன் நமக்கு கற்றுத் தருவார். "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை"" (சங். 119:165). ஆகவே இடறலில்லா வாழ்க்கைக்கும், சமாதானமான வாழ்விற்கும் வேதம் இன்றியமையாததுமாயிருக்கிறது. கர்த்தர் நம்மை ஆசீர் வதிப்பாராக. ஆமென்.

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
சகோதரி. பின்கிஷா ராஜன்
செல்வன். ஜேடன் பால் கிரன்குமார்
சகோ. ஜெயக்குமார்
செல்வன். டியோன் பென்சாம்
சகோதரி. அனுஷா ஜெய்சன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்சார்
சகோ. சாமுவேல்.E
செல்வன். ஜான்ராஜ் ராஜவேல்
சகோ. வெனிஷ்
சகோதரி. ஆமி ஜாய் சுகின்

செல்வன். ஜெகு சாமுவேல்
செல்வ சிங்
செல்வன். யானிங் அருண்
சகோ. ஜான் போஸ்கோ
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
செல்வி. செர்லி ஸ்ரீநிவாசன்
சகோதரி. ஏல்ஜீவா சாமுவேல்
சகோ. ஏசுரெத்தினம்
செல்வி. ஸ்டெஃபானா சதீஷ்குமார்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வி. ஜெஸ்வின் யேசுதாஸ்
சகோதரி. ஜெமீலா ஜோய்ஸ்
சகோ. பால் டேனியேல்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி . ஷீபா ஜிவல்சிங்

பிறந்த நாட்கள் மற்றும் திருமண நாட்களை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி / திரு . சைமன் ஜெயகுமார் &
ஆனி தெபோரா

# 2026 – மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/03/2026 | சகோதரி. அனிதா திவ்யராஜ் | சகோதரி. பிரிசில்லா ஆமோஸ் |
| 08/03/2026 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ. தாமஸ் |
| 15/03/2026 | சகோதரி. ஆஸ்லின் சுபின்சிங் | சகோதரி. எப்சிபா ஸ்டீபன் |
| 22/03/2026 | சகோ. பக்தராஜ் | சகோ. ஜான்சன் |
| 29/03/2026 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ரவிஜான் பீட்டர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/03/2026 | சகோ. ஏசுரத்தினம் | சகோ. ஆண்டனி |
| 13/03/2026 | தாய்மார்கள் தின ஆராதனை (MOTHERS Day) | |
| 20/03/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/03/2026 | சகோ.எபினேசர் | சகோ. ஸ்டாலின் |

## ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**

05/03/2026 மாலை 6:00 முதல் 06/03/2026 காலை 6:00 வரை

12/03/2026 – அன்று முழு இரவு ஜெப ஆராதனை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

21/03/2026 – சகோதரிகள் ஐக்கிய கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – I & II தீமோத்தேயு

25/03/2026 – Area Prayer Cell-6:30-7:30

27/03/2026 – வாலிபர் ஐக்கிய கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – சங்கீதம் – 51 முதல் 100 வரை

### சனிக்கிழமை

சிறுவர் வேதாகம பள்ளி

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

### திங்கட்கிழமை

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

### செவ்வாய்கிழமை

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:15 வரை

### வியாழக்கிழமை

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 மார்ச் மாதத்திற்கான வேத வினா!



**கீழக் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. இஸ்ரவேலர் திராட்சைப்பழங்களை ஆலையாடின போதிலும் என்ன செய்வதில்லை ?
2. எவர்கள் நாணி தங்கள் வாயை மூடுவார்கள் ?
3. மீகா எந்த வசனத்தில் மேசியாவின் வருகையைப் பற்றி தீர்க்கதரிசனம் கூறியுள்ளார் ?
4. பொதுவான கேள்வி – மீகா புத்தகத்தின் கருப் பொருள் என்ன ? நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்கள் என்ன ?
5. மீகா எவைகளை போல ஊளையிடுவார் ?
6. யாக்கோபு வம்சத்துத் தலைவர்கள், இஸ்ரவேல் வம்சத்து அதிபதிகள் எதை இரத்தப்பழியினால் கட்டுவித்தார்கள் ?
7. மனுஷனே, எது இன்னதென்று கர்த்தர் நமக்கு அறிவித்திருக்கிறார் ?
8. நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன் நான் இருளிலே உட்கார்ந்தால் கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் என்று கூறியது யார் ?
9. யார் யாக்கோபின் ஜனத்திற்கு ஏற்ற பிரசங்கியாயிருப்பான் ?
10. மீகா புத்தகத்தின் முக்கிய வசனம் எது? நீங்கள் புரிந்துகொண்ட வசனம் (குறிப்பு 6 அதிகாரத்தில் உள்ளது).
11. கர்த்தருடைய ஜனம் எதின் நடுவிலே தனித்து வனவாசமாயிருக்கிறது ?
12. பூண்டுகள் மேல் வருகிற மழைகளைப் போல இருப்பவர்கள் யார் ?
13. எங்கே குடியிருக்கிறவர்கள் வெளியே வருவதில்லை ?
14. இஸ்ரவேலின் கையில் எவை இராதபடிக்கு கர்த்தர் அகற்றுவார் ?
15. அவனவன் தன் தன் செடி மரத்தின் நிழலில் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான் என்று யாருடைய வாய் சொல்லிற்று ?

விடைகளை வருகின்ற 20-03-2026 க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**“ மீகா புத்தகத்தில் ”**

இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026 – பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடைகள்

1. பவுல் (ரோமர் 12:12)
2. ஆபிரகாம் (ரோமர் 4:21)
3. இயேசு கிறிஸ்து (ரோமர் )
4. அப் ..பவுல் (ரோமர் 12:10)
5. (ரோமர் 8:15)
6. பெர்சிபாள் (ரோமர் 16:12)
7. ரோமாபுரி சபை (ரோமர் 1:8)
8. பவுல் (ரோமர் 12:18)
9. (ரோமர் 12:1)
10. (ரோமர் 1:24)
11. (ரோமர் 1:28)
12. (ரோமர் 14:8)
13. (ரோமர் 12:9)
14. (ரோமர் 10:15)
15. பவுல் (ரோமர் 1:9)

## 2026– பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. ஜான்சி ராணி
சகோதரி. ஜாஸ்மின் பென்சாம்
சகோதரி. நகோமி ஜான்சன்
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சாந்தி
சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. நிஜா
சகோ. எட்வின்சாம் ஞானதுரை
சகோ. எபிநேசர்
சகோ. ராஜா துரைராஜ்

சகோதரிகள் பகுதி

## நம்முடைய வழிகள்;

கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்: துன்மார்க்கலின் வழியோ அழியும். (சங் 1:6). ஒருவனுடைய வழிகள் கர்த்ருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும் படி செய்வார் (நீதி 16:7). அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவா 14:6). நாம் இரண்டு வழிகளில் நடக்க கூடாது.

மத்தேயு 7:13,14– இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவாயும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதன் வழியாய்ப் போகிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்றும், நீதி 28:6–ல் இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியனாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி என்று வாசிக்கிறோம்.

நாம் அவருடைய வழிகளில் நடக்கும் போது அவருடைய பிரசன்னம் நம்மோடு கூட வரும். சில வழிகளை குறித்து பார்க்கலாம்.

### 1.துன்மார்க்கரின் வழி

துன்மார்க்கனுடைய பாதையோ காரிருளைப் போலிருக்கும், தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள் (நீதி 4:19).
நாம் இருளில் நடக்கிறவர்கள் போல நடக்க கூடாது. ஏனென்றால் ஏசா 60:2–ல் வாசிக்கிறோம், இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும், ஆனாலும் கர்த்தர் உதிப்பார், அவருடைய மகிமை உன் மேல் காணப்படும் என்றும், I பேதுரு 2:9– நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் என்று வாசிக்கிறோம்.

### 2. கர்த்தருடைய வழிகள் உத்தமமானது.

தேவனுடைய வழி உத்தமமானது, கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். சங் 18:30.

கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண், அக்கிரமகாரருக்கோ கலக்கம். நீதி 10:29. நாம் கர்த்தரின் வழியை பின்பற்றினால், பெலத்தின் மேல் பெலன் பெறுவோம். அந்த வழியில் எந்த பெலவீனமும் இருக்காது.

## 3. கர்த்தருடைய வழிகள் செம்மையானது.

கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள், பாதகரோவென்றால் அவைகளில் இடறி விழுவார்கள்.ஓசியா 14:9. கர்த்தருடைய வழி நம்மை நீதிமான்களாக்குகிறது. கர்த்தருடைய வழியில் நடக்க தேவன் நமக்கு கிருபையைத் தருவார். இயேசுவே உண்மையான வழி, அவரே பரலோகத்தின் வாசல், அவர் நல்ல மேய்ப்பர், அவர் நம்மை ஆபத்து களிலிருந்தும் காத்து நடத்துகிறார். அவர் இரக்கமுள்ளவராகவும், நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்தியவராகவும், இருந்தார். அவர் நன்மை செய்து சுற்றித் திரிந்தார். அவர் ஞானத்தால் நிறைந்திருந்தார். இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும், அவரே வழி.

நம்மை நாமே சோதித்தறிவோம், நாம் நித்திய ஜீவனுக்கு வழி வகுக்கும், ஆண்டவரின் வழியில் நடக்கிறோமா ? இல்லை ஆண்டவரின் வழிக்கு மாறாக, நரகத்திற்கு செல்லும் வழியில் நடக்கிறோமா ? வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும் (சங் 139:24).

## 4. மதியீனனின் வழி

நீதி12:15–மதியீனனுடைய வழி அவன் பார்வைக்கு செம்மை யாயிருக்கும்: ஆலோசனைக்கு செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் என்று வாசிக்கிறோம்.

## 5. துரோகிகளின் வழி

நீதி 13:15 – நற்புத்தி தயையை உண்டாக்கும்: துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது.

## 6. பின் வாங்குபவன் வழி

நீதி14:14– பின் வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலேயும்: நல்ல மனுஷனோ தன்னிலே தானும் திருப்தியடைவான்.

## 7. சோம்பேறியின் வழி

நீதி 15:19– சோம்பேறியின் வழி முள் வேலிக்கு சமானம்: நீதிமானுடைய வழியோ ராஜபாதை.

## 8. வாலிபனின் வழி

பிர 12:1– நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை. தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்கு பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும். வாலிப வயதிலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும். பொல்லாத இந்த உலகத்திலே அசுத்தத்திற்கு இடம் கொடுக்காமல், தேவனுடைய வழிகளில் நடப்போம். (சங் 37:5). உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்கள் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

கர்த்தருடைய வழியிலே நியாயம் உண்டு, எந்த விதமான அநீதியையும், பாரபட்சத்தையும் காண முடியாது. நாமும் அவருடைய வழியில் நடப்போம். கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

Sis. பிரிசில்லா ஆமோஸ்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை,

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் பிராங்ளின் அவர்களிடத்திலும்,
இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. தாஸ் கருணா அவர்களிடத்திலும்,
போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. கிரண் அவர்களிடத்திலும்,
ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும்,

தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

# Kids Corner

## ANSWER'S FOR THE MONTH OF FEBRUARY

1. A man ( Rev 4:7 )
2. Harps ( Rev 5:8 )
3.Death ( Rev 6:8 )
4.One of the Elders ( Rev 7:13 )
5.There were Voices, Thunderings, Lightning's and an Earthquake ( Rev 8:5 )
6. Apollyon ( Rev 9:11 )
7. Lion ( Rev 9:17 )
8. As sweet as honey in his mouth ( Rev 10:10 )
9. Pillars of fire ( Rev 10:1 )
10. Sodom and Egypt ( Rev 11:8 )
11. Michael and his angels ( Rev 12:7 )
12.Two wings of a great eagle ( Rev 12:14 )
13. 7 heads and 10 horns ( Rev 13:1 )
14. A Lamb ( Rev 13:11 )
15. 666 ( Rev 13:18 )

## God is with You

Are you sick,
Are you sad
Well pray to God
And you'll be glad

Take a sleep,
Take a rest
And let God do the rest

Today, tomorrow
You'll feel the best
As God said He'll do the rest
For God is for you every day.



# MARCH MONTH QUIZ FOR CHILDREN



1. What food did Daniel Choose instead of the King's meat?
2. Who Showed the King his Dream and the meaning?
3. Who was the fourth person seen in the Fire?
4. What happened the King Nebuchadnezzar because of his Pride?
5. What writing appeared on the wall at the King's Feast?
6. How many times a day did Daniel pray?
7. Who shut the lion's mouth?
8. How long did Daniel pray and fast for his people?
9. Who came to Daniel to give him Understandings?
10. What will happen to many who sleep in the dust of the earth?

## *Kids Find the answer from the Book of*

## Daniel

**CHILDREN'S WHO WROTE THE ANSWERS**

**FOR THE MONTH OF FEBRUARY**

Fyona
Solomon
Adriel
Andrea
Feshika

Abel Raj
Vincy
Rheual
Abel Raj
Felisha

Name missed in February Month Magazine
Jayden

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO.** ஆரோக்கியதாஸ் . P
99870126

### செயலாளர்

**BRO.** தாமஸ்
66810423

### பொருளாளர்

**BRO.** ஜான்சன்
97610275

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS.** டெய்சி எபினேசர்
60686612

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M.** கிறிஸ்டோபர்
67096449

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்
யோவான் 12:26


**Church Postal Address**
Your Name
PO.Box.No.46795
Fahaheel-64018
Kuwait

Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com



PRIVATE CIRCULAR ONLY